புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் மகளிர் குறித்த கருத்தாடல்கள்

முனைவர் கோ.பாலாஜி
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை,
தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் காலத்தையும், மக்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் கண்ணாடியாகத் திகழ்கின்றது. அந்த வகையில் காப்பியங்களில் சிறந்ததாகவும் இரட்டைக்காப்பியங்களில் ஒன்றாகவும் போற்றப்படும் சிலப்பதிகாரம் பண்டைய கால மக்களின் வாழ்வியலையும் வெளிக்காட்டும் கருத்துப்பெட்டகமாகத் திகழ்கின்றது. அதனடிப்படையில் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் மகளிரின் வாழ்வியலை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது. மகளிர் இல்லற வாழ்வில் தமக்குரிய கடமையில் தவறாமலும், அரசியலில் அறநெறி வழுவாமலும், பொதுநலத்தில் அக்கறையுடனும், கடமைகளில் கண்ணும் கருத்தாகவும், தன் காதலனை கைக்கொள்ள கைம்மை நோன்பிருந்தும், இவ்வாறான செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் தன்னை ஒப்பனை செய்து கொள்வதிலும் மகளிர் ஈடுபட்டுள்ளனர். சிலப்பதிகாரக் காப்பியத்தில் அரசனின் மனைவி முதல் சாதாரணக் குடிமகள் வரை கதாப்பாத்திரமாக இடம்பெற்றுள்ளது தனிச்சிறப்பாகும். விருந்தோம்பல், குடும்பத்தில் கடமையாற்றுதல், போன்றவற்றில் பெண்கள் சிறந்து விளங்கியுள்ளனர். ஒப்பனை, மாதவி, சித்திராபதி, மாதரி போன்றவர்களின் பண்புகளும் எடுத்துக்காட்டப்படும். அதே நேரத்தில் கண்ணகி இல்லறம் பேணும் பெண்ணாகவும், எதிர்மொழி பேசாத பதுமையாகவும் விளங்குகிறாள் என்பன போன்ற பல்வேறுபட்ட கருத்துகளை விளக்கும் வகையில் இக்கட்டுரையின் உள்ளடக்கம் அமையும்.

## ஆய்வு நெறிமுறைகள்

இந்த ஆய்வில் மகளிர் வாழ்வியல் குறித்து ஆராயப்படுவதால் பெண்ணிய அணுகுமுறையும் , பாடற்கருத்துக்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளதால் விளக்கமுறைத்திறனாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளது .

## முன்னுரை

இலக்கியங்கள் காலத்தையும், மக்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் கண்ணாடியாகத் திகழ்கின்றது. அந்த வகையில் காப்பியங்களில் சிறந்ததாகவும் இரட்டைக்காப்பியங்களில் ஒன்றாகவும் போற்றப்படும் சிலப்பதிகாரம் பண்டைய கால மக்களின் வாழ்வியலையும் வெளிக்காட்டும் கருத்துப்பெட்டகமாகத் திகழ்கின்றது. அதனடிப்படையில் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் மகளிரின் வாழ்வியலை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## இல்லற வாழ்வில் மகளிர்

தமிழரின் வாழ்வியலில் முக்கியப் பக்கற்றுவது இல்லறம் ஆகும் . இந்த இல்லறத்தின் அரப் பண்புகளாக சுற்றம் பேணுவது, விருந்தோம்பல் செய்வது போன்ற முக்கியக் கடமைகள்

மகளிருக்கு இருப்பதை நாம் அறியலாம் . இதனைப் பேணிய கண்ணகி மனையறம்படுத்த காதையில் ,

> “மறப்பருங் கேண்மையோ தரப்பறி சாரமும்
> விருந்து புரந்தரூவும் பெருந்தன் வாழ்க்கையும்
> வேறுபாடு திருவின் வீறுபெறக் காண
> உரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
> யாண்டு சில கழிந்தன விர்பெருங் கிழ......... ”[i]

என்று கண்ணகியின் இல்லறச் செயல்பாடு குறிக்கப்படுகின்றது . இதனைப் பார்க்கும் போது மகளிர் எந்த சூழ்நிலையிலும் தன கடமையில் மாறியது இல்லைஎன்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு இருந்த கண்ணகி தன் கணவன் எத்தகைய தவறு செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தில் இருந்துள்ளாள் . கோவலன் தன்னை விடுத்து மாதவியிடம் சென்ற போதும், மாதவியிடம் குடும்பம் நடத்தி மணிமேகலையைப் பெற்றபோதும், மாதவியைப் பிரிந்து வந்து வணிகம் செய்வதற்காக தனது காற்சிலம்பைக் கேட்ட போதும், மதுரை செல்லும் வழியில் கோவலனின் செயல்பாட்டிற்கு எந்த இடத்திலும் எதிர்மொழி கூறாது கோவலனின் அனைத்து செயல்பாட்டிற்கும் உறுதுனையாக இருந்தாள்., இதனை ,

> “குலந்தரு வான் பொருட் குன்றந் தொலைத்த
> இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன
> நலங்கேழ் முறுவ நகைமுகங் காட்டிச்
> சிலம்புள கொன்மெனச் சேயிழை கேளிச்”[ii]

என்ற சிலப்பதிகார அடிகள் மூலம் அறிய முடிகின்றது. இதனை ஒப்புநோக்கும்போது சிலப்பதிகார காலத்தில் ஆண்களின் நிலைப்படும் பெண்களின் நிலைப்பாடும் சமத்துவமற்ற நிலையில் இருந்துள்ளதை உயித்துணர முடிகின்றது . இத்தகைய நிலை இருந்தாலும் கண்ணகி தன் கணவனைப் பேணுவதிலும் அக்கறையாக இருந்துள்ளாள் . என்பதை,

> “போற்றா ஒழுக்கம் புரிந்தீர் ! யாவதும்
> மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
> ஏற்று எழுந்தனள் யான் என்று அவர் கூறக்”[iii]

என்று கூறுவதிலிருந்து நீங்கள் அழைத்தாலும் நான் வருவேன் அதனால் ஏற்படும் துன்பத்தைப் பற்றிக் கவலையில்லை . என்று கூறுவதன் மூலம் தன் கற்பின் நிலையிலிருந்து உயர்ந்து நிற்கின்றாள் என்பதை அறிய முடிகின்றது.

### பொதுநலத்தில் மகளிர்

பொற்கொல்லனின் சூழ்ச்சியில் அநீதியான தீர்ப்பை வழங்கிய பாண்டிய நெடுஞ்செழியன் பொற்கொல்லனின் தவறான செய்தியைக் கேட்டு தவரான நீதி வழங்கிய நான் தான் கள்வன் என்று சொல்லி விழுந்து இறந்தான் . கணவனின் இறப்பைத் தாங்காத மனைவியாகிய பாண்டிமாதேவி தான் கண்ட கனவு உண்மையானதை எண்ணி கண்ணகியிடம், உன் நிலையை எண்ணி வருந்துகிறேன் . உன்னை எனசொல்லித் தேற்றுவது ஆகையால் உன்நிலைதான் என் நிலையும் . என்று கூறி தான் இறந்து விடுகிறாள். இவற்றின் மூலம் பாண்டிமாதேவியின் பண்பு வெளிப்படுவதோடு பெண்ணிற்குப் பெண் இறக்கம் கொள்ளும் பாங்கினையும் அறிய முடிகிறது. அந்த வகையில் மகளிர் சுயநலமின்றி சிறிதேனும் பொதுநலம் விறும்புபவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது .

### வீரமிகுந்த கண்ணகி

புகார்க் காண்டத்தில் காட்டப்பட்ட கண்ணகி மதுரைக்காண்டத்தில் பொங்கிஎழுந்த வீரத்தை நிலைநாட்டும் பெண்ணாகச் சித்தரிக்கப்படுகின்றாள். தன கணவன் இறந்த செய்தியைக் கேட்ட கண்ணகி துணிச்சல் மிக்கவளாகவும் , ஆவேசம் கொண்டவளாகவும் மாறுவதைப் பார்க்கின்ற பொழுது கண்ணகி கோவலனின் மீது கொண்டிருந்த அன்பைக் காணமுடிகின்றது.

"அனைவரும் கேளுங்கள் காய்கதிர் செல்வனே
பரந்த அலைகளையுடைய கடலை வேலியாக
உடைய இவ்வுலகில் நிகழ்வனவற்றை எல்லாம்
நீ அறிவாய் ஆதலால் நீயே சொல் என்
கணவன் கள்வனா ?[iv]

என்பதன் மூலம் கணவனுக்காக பொங்கி எழும் கண்ணகியை இங்கு காணமுடிகிறது. இதனை ஒப்ப்நோக்கும்போது கண்ணகி அமைதியான பெண்ணாகவும், சூழ்நிலை மார்ம்போது அதற்கு ஏற்றார்போல தனது இயல்பை மாற்றிக்கொள்ளும் தன்மை படைத்த பெண்ணாகவும் இருந்துருக்கிறாள் என்பதை முழுவதுமாக உயித்துணர முடிகின்றது.

சேற்றில் மலர்ந்த செந்தாமரை மாதவி

மாதவி கணிகையர் குளத்தில் பிறந்திருந்தாலும் கோவலனைக் கண்டு அவன் ஒருவனையே மணந்து உயர்ந்தவளாய் வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தாள் . இதனை,

"கணிகையர் குளத்தில் பிறந்தவள்தான் மாதவி ஆனாலும் தன் குல
குல வாழ்க்கையை பின்பற்றாமல் நல்ல கலைவாழ்க்கை வாழ முயற்சி எடுத்துத் தன்
நிலையை உயர்த்திக் கொண்டவள்"[v]

என்பதன் வழி அறியமுடிகின்றது . உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் உயர்ந்த பண்பாட்டோடு இருப்பது வியப்பில்லை . அனால் கணிகையர் குலத்தில் பிறந்த பெண்ணாகிய மாதவி நடைமுறை வாழ்க்கையில் கோவலன் ஒருவன் மட்டுமே தன் கணவன் என்ற எண்ணத்தோடு கடைசிவரை வாழ்ந்து இறுதியில் துறவு வாழ்விற்கு சென்றவள். அனால் மாதவியோடு வாழ்ந்த கோவலன் கணிகையர் குலத்தைச் சார்ந்த பெண் என்பதால் அவள் மேல் சந்தேகம் கொள்கிறான். ஆனால் உண்மையில் மாதவி குற்றமற்றவள் என்பதை பின்னர் அவன் உணர்ந்து கொள்கிறான்.

கவுந்தியடிகளின் அறப்பண்பு

கோவலனும் கண்ணகியும் தனியாக மதுரைநோக்கிச் செல்லும்போது கவுந்தியடிகளின் வழித்துணை கோவலனுக்கு மகிழ்வைத் தருகின்றது. மதுரைப் புறநகரில் கோவலனையும், கண்ணகியையும் மாதரி என்னும் இடையர்குலப் பெண்ணிடம் அடைக்கலப்படுத்தி , கவுந்தியடிகள் கண்ணகியைக் குறித்துப் பேசுவது அவருடைய பெருந்தன்மையையும், நம்ம்பிக்கையையும் தெளிவுபடுத்துகிறது.

"நடுங்கு துயரெய்தி நாப்புரை வாடித்
தன்னுயர் காணத் தகைசால் பூங்கொடி
இன்றுனை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித் தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங் கண் டிலமால்'[vi]

என்ற கண்ணகியின் கற்புச் சிறப்பினைக் கவுந்தியடிகள் மாதரியிடம் உரைக்கின்றார் . கோவலனுக்கும் கண்ணகிக்கும் சமணத் துறவியான கவுந்தியடிகள் நல்லதொரு குணத்தையும், அறத்தையும் கொடையாக வழங்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

உயிர்களைப்பேணும் மாதரி

கவுந்தியடிகள் கோவலனையும், கண்ணகியையும், மாதரியிடம் அறிமுகப்படுத்தி வைக்கின்றார் . அறிமுகத்தோடு மதரியின் இல்லத்தில் அவர்களை அடைக்க்கலப் படுத்துகின்றார். துறவியான கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியை வேறு யாரிடமாவது அடைக்கலப்படுதியிருக்கலாம். ஆனால் அதை விடுத்து மாதரியிடம் அடைக்கலப்படுத்தியதன் கரணம் என்னவாக இருக்கும் என்று பார்க்கும் போது மாதரி தாய்மைக்குணம் பொருந்தியவள் என்பதை 'தாயும் நீயே ஆகித் தாங்கு' என்று கூறுவதிலிருந்து அறியலாம். இதனை,

"மங்கல மடந்தையை நன்னீராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சந்த் தீட்டி
.........................................................................
.........................................................................
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு"[vii]

என்ற அடிகளின் மூலம் மாதரியின் தாய்மைக்குணமும் , உயிர்களைப் பேணும் பண்பும் தெரிய வருகின்றது.

பழமை மாறாத சித்திராபதி

மாதவியின் தாய் சித்திராபதி . இவள் கணிகையர் குலத்தைச் சார்ந்தவள் . ஆகையால் தான் பெற்ற மகள் மாதவியையும், மாதவியின் மகள் மணிமேகலையையும் கணிகையர் குலத்தொழிலில் ஈடுபடுத்த வேட்கை கொண்டிருந்தாள். இவள் பழமை மாறாச் சிந்தனையின் ஊற்றாக காட்டப்பட்டுள்ளார். என்பதை ,

"நூறுபத்து அடுக்கிய எட்டுக்கடை நிறுத்திய
வீறுயர் பசும்பொன் பெறுவது இம்மாலை
இம்மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு என
மானமர் நோக்கிய ஓர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரும் மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்தினாள்"[viii]

என்ற அடிகளில் மாதவியை விலை கூறுவதிலிருந்தும், மாதவியின் மகள் மணிமேகலை வளர்ந்த பின்னர் , அவளையும் கணிகையராக மாற்றவேண்டும் என்ற வேட்கையின் வழியாகவும் சித்ராபதியின் பழமை சார்ந்த வாழ்வியலை அறிந்துகொள்ள முடிகிறது.

ஒப்பனை செய்துகொள்ளும் மகளிர்

ஒப்பனை செய்து கொள்வது என்பது பெண்களுடன் பிறந்த குணம் மற்றும் கலையாகும். சிலப்பதிகாரப் பெண்கள் தங்களுடைய கூந்தலை ஐந்து வகையாக முடிந்துள்ளனர் . இதனை சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஐந்சில் ஓதி, ஐம்பால் ஓதி, ஐங்கூந்தல் போன்ற சொற்களால் அறியலாம்.

பெண்கள் முல்லை, செங்குவளை, நெய்தல், மல்லிகை, குறிஞ்சி, போன்ற பூக்களைக் கூந்தலில் சூடியுள்ளனர் . நெற்றியில் திலகமிட்டுள்ளதை,

"வாணுதல் திலகம்"[ix]
"திலகமும்"[x]
"திலகச் சிறுநுதல்"[xi]
"காசறைத்திலகம்"[xii]

என்ற சிலப்பதிகாரச் சொற்றொடர்கள் இதனைச்சுட்டுகின்றன . இதன்மூலம் சிலப்பதிகார மகளிர் பல்வேறு விதமான ஒப்பனைகளைச் செய்துள்ளனர் என்பது பெறப்படுகின்றது . இதுமட்டுமல்லாமல் மை தீட்டுதல், தொய்யில் எழுதுதல் , குங்குமம், சந்தனம் பூசி அழகுபடுத்துதல் போன்ற செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

கைம்மை நோன்பிருக்கும் மகளிர்

மகளிர் தங்கள் கணவனை இழந்த பிறகு தங்கள் வாழ்க்கையே வெறுமையாகி விட்டதை உணர்ந்தனர் . பாண்டிமாதேவியின் மரணம் அதிர்ச்சியால் ஏற்ப்பட்டதாகும் . அனால் கண்ணகியோ கோவலன் இறந்ததைக் கேள்விப்பட்டதும் கை வளையல்களைக் ஏறிகிறாள். மாதவி துறவியானால்,

"மற்றது கெட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமேகலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணாதொழிக எனக்
கோதைத் தாமம் குழலோடு களைந்து

போதித்தானம் புரிந்து அரங்கொள்ளவும்'’[xiii]

இவ்வாறான கைம்மை நோன்பு நோற்கும் மகளிர் கவலைய மகளிர் என்று அழைக்கப்படுகின்றனர் . அடியார்க்கு நல்லார் தம் உரையில் “உயவற்பெண்டிர்’’[xiv] என்று குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க்காப்பியம். இந்தக்காப்பியம் அனைவரும் போற்றும் காப்பியமாக இருக்கின்றது. இந்த நூலினுள் பல்வேறு விதமான மகளிர் குறித்த கருத்தாடல்கள் ஆழப் புதைந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. இதனுள்

- இல்லறம் பேணும் கண்ணகி கணவனின் தவறான ஒழுக்கத்தை கண்டிக்காமல் கணவன் சொல்படி நடக்கும் பெண்ணாக இருக்கின்றாள்.அவ்வாறு இருக்கும் கண்ணகி தன் கணவன் இறந்தவுடன் கோபமடையும் வீரமிகுந்த பெண்ணாகவும் மாறுவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது .
- இவற்றையெல்லாம் விட முத்தாய்ப்பாக கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி தன் கணவன் கோவலன் மட்டுமே என்ற உயரிய நோக்கோடு வாழ்ந்து வந்தது போற்றத்தக்கது.
- மேலும் அறப்பன்புகள் நிறைந்த கவுந்தியடிகள்,
- உயிர்களைப் போற்றும் மாதரி,
- தன் பழமையிலிருந்து எப்போதும் மாறாத சித்திராபதி

போன்ற மகளிர் பற்றிய கருத்துக்களைக் காணும்போது சிலப்பதிகார மகளிர் பன்முக நோக்குடன் வாழ்ந்திருப்பதை அறியமுடிகின்றது. இவ்வாறெல்லாம் வாழ்ந்த மகளிர் தம்மை ஒப்பனை செய்வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. கடைசி நிலையாக கூறப்படும் கைம்மை நோன்பு இருப்பதையும் சிலப்பதிகார மகளிர் விட்டுவைக்கவில்லை என்பதும் இந்தக் கட்டுரையின் வழிப் பெறப்படுகின்றது .

---

[i] . சிலப்பதிகாரம், மனையறம் படுத்த காதை, அடி – 85-90
[ii]. சிலப்பதிகாரம், கனாத்திரம் உரைத்த காதை, அடி – 70-73
[iii] . சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, அடி.81-83
[iv] . சிலப்பதிகாரம், துன்பமாலை. அடி15.
[v]. ந.யோகாம்பாள், காப்பிய மகளிர் ஒரு புதிய கண்ணோட்டம், ப.10
[vi]. சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, அடி, 140-144
[vii]. மேலது, அடி. 131-136
[viii]. சிலப்பதிகாரம், அரங்கேற்றுக்காதை, அடி. 164-169
[ix] . சிலப்பதிகாரம், அந்திமாலை சிறப்புசெய் காதை,அடி.54
[x] . சிலப்பதிகாரம், வேனிற்காதை, அடி.74
[xi] . சிலப்பதிகாரம்,ஊர்காண்கதை, அடி.143
[xii] . சிலப்பதிகாரம், நடுகற்காதை,அடி.27
[xiii] . சிலப்பதிகாரம்,நீர்ப்படைக்காதை, அடி.103-108
[xiv] அடியார்க்கு நல்லார், உரைச்சிலம்பு, ப.25


துணைநூற்பட்டியல்

1. உ.வே.சாமிநாதையர் (தொ.ஆ), சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லருரையும் , தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு. தஞ்சாவூர் . பத்தாம் பதிப்பு.1985.
2. ந.யோகாம்பாள், காப்பிய மகளிர் ஒரு புதிய கண்ணோட்டம், முல்லைப் பதிப்பகம் , சென்னை . முதல் பதிப்பு .2015


********* ********* ********** ********* ********* ********** ********** **********